DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021 Deposition of Witness for : P.W.5**

| | | | |
|---|---|---|---|
| Name | : மணிவேல் | Caste | |
| Father's Name | : கந்தசாமி | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 14.10.2025

**முதல் விசாரணை**

1. நான் நல்லசெல்லிபாளையத்தில் நத்தமேட்டு தோட்டத்தில் குடியிருக்கிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி செல்லமுத்து என்னுடைய பக்கத்து தோட்டத்தை சேர்ந்தவர். கடந்த 23.10.2018 ஆம் தேதி மாலை சுமார் 5.00 மணிக்கு மேற்படி செல்லமுத்துவின் தோட்டத்தில் ஒரு அடையாளம் தெரியாத ஆண் பிணம் கிடைப்பதாக சொன்னார்கள் நான் போய் பார்த்தேன். நான் போய் பார்த்தபோது ஒரு பிணம் அழுகிய நிலையில் பூச்சி அரித்தவாறு கிடந்தது. அதன் தலையில் ரத்தக்காயம் இருந்தது. மூலனூர் காவல் நிலையத்திலிருந்து ஆய்வாளர் மற்றும் போலீசார் அங்கு வந்தார்கள். அருகில் இருந்தவர்கள் விசாரித்தார்கள். சம்பவ இடத்தில் மகஜர் மற்றும் வரைபடம் தயாரித்தார்கள்.பார்வை மகஜரில் நானும் சக்தி வடிவேலன் என்பவரும் சாட்சி கையயையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடைய தான் மேற்படி **பார்வை மகஜர் அ.சா.ஆ.7.**

2. மேற்படி பிணத்துக்கு அருகில் ஒரு வெள்ளை மஞ்சள் நீலம் கட்டம் போட்ட முழுக்கை சட்டை கே எம் கிருத்திக் பேஷன் என்று லேபிள் இருந்தது. மேகாஸ் என்கிற கருப்பு நிற ரத்தக்கரை படிந்த பேண்ட் ஒன்று இருந்தது. மேலும் என்.எஸ்.கே என்று பெயர் எழுதப்பட்ட ஒரு சிவப்பு நிற ஷார்ட்ஸ் இருந்தது. ஒரு கருப்பு நிற ரத்தக்கரை படிந்த இரண்டாகப் கிழிந்த நிலையில் ஒரு பர்முடாஸ் இருந்தது. வி கேசி லைட் என்கிற பெயர் கருப்பு நிற செருப்பு மேற்படி இடத்தில் கிடந்தது. ரத்தக்கரை படிந்த ஓடக் கல் ஒன்று கிடந்தது.

ஓமிகா கம்பி காடி போடும் இடம் என குறிப்பிடப்பட்ட ஒரு விசிட்டிங் கார்டு மேற்படி இடத்தில் கிடந்தது. மேற்படி பொருட்களை பேப்பரில் எழுதிக் கொண்டு ஆய்வாளர் என்னிடம் கையெழுத்து வாங்கினார். போலீசார் மேற்படி பொருட்களை கைப்பற்றினார்கள். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான் மேற்படி **கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8. நீலம் வெள்ளை மற்றும் மஞ்சள் நிற கோடுபோட் சட்டை சா.பொ.6, கருப்பு நிற பேண்ட் சா.பொ.7, கிழிந்த நிலையில்உள்ள பர்முடாஸ் சா.பொ.8, சிவப்பு நிற சார்ட்ஸ் சா.பொ.9, வி.கே.சி லைட் செருப்பு ஒரு ஜோடி சா.பொ.10, ஓடைக்கல் சா.பொ.11, ஒமைகா கம்பி காடி போடும் இடம் என குறிப்பிடப்பட்ட விசிட்டிங்கார்டு சா.பொ.12,** மீண்டும் பத்தரை மணிக்கு போலீசார் மேற்பட்ட இடத்தில் ரத்தம் படிந்த மண் மற்றும் ரத்தம் படியாத மண் ஆகியவற்றை மகஜரில் சேகரித்தார்கள். மேற்படி மகஜரில் நானும் சக்தி வடிவேலும் கையெழுத்து செய்தோம் மேற்படி மகஜர் அ.சா.ஆ.9, இரத்தம் படிந்த மண் சா.பெ.13, இரத்தம் படியாத மண் ச.பொ.14. மேற்படி சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்

<u>1-ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் கையெழுத்து செய்த பார்வை மகஜர் மற்றும் இரண்டு கைப்பற்றுதல் மகஜர்களில் என்னுடைய கையெழுத்துக்கு கீழ் தேதி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். மற்றொரு சாட்சி சக்திவடிவேலும் மேற்படி கையெழுத்துக்கு கீழ் தேதி குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி பிணம் கிடந்த தோட்டத்தைச் சுற்றி வேறு தோட்டங்களும் தோப்புகளும் உள்ளது என்று சொன்னால் சரிதான். சுமார் 200 அடி தொலைவில் தோட்டத்துசாலை உள்ளது. மேற்படி பகுதியில் தென்னந்தோப்பு உள்ளது. சா.பொ.11 ஓடைக்கல் ஓடைக்கு அருகில் கிடைக்கும் தோட்டத்தை சுற்றி வைத்திருப்பார்கள் நடுப்பகுதியில் இருக்காது. பிணத்திற்கு அருகில் பார்த்த பொருட்கள் எந்த காலகட்டத்தில் இருந்து மேற்படி இடத்தில் கிடந்தது என்பது எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். மேற்படி பிணம் அழுகிய நிலையிலும் துர்நாற்றத்துடனும் அங்கு கிடந்தது என்று சொன்னால் சரிதான்.

2. பிணத்தையோ அங்கிருந்த பொருட்களையோ நான் தொட்டு தூக்கி பார்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். பார்வை மகஜரில் பிணம் எந்த நிலையில் கிடந்தது என்று குறிப்பாக சொல்லப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. மேற்படி இடத்திலிருந்து சுமார் 300 அடி தொலைவில் வெள்ளக்கோயில் பிரதான சாலை செல்கிறது என்று சொன்னால் சரிதான். அங்கிருந்த பொதுமக்கள் யாரும் பிணத்தை யார் என்று அடையாளம்

சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். போலீசார் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் பார்வை மகஜர் தயார் செய்யவில்லை என்றாலும் நான் அதில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும் நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் வழக்கு பொருட்களை போலீசார் கைப்பற்றவில்லை என்றாலும் நான் கைபற்றுல் மகஜரில் கையெழுத்து செய்யவில்லை என்றாலும் எனவே தான் மேற்படி ஆவணங்களில் என்னுடைய கையெழுத்து கீழ் நான் தேதியை குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிரி தரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.14 19:05:39 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021 Deposition of Witness for : P.W.6**

| | | | |
|---|---|---|---|
| Name | : சவிதா | Caste | |
| Husband's Name | : | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 14.10.2025

முதல் விசாரணை

நான் நல்ல செல்லிபாளையத்தில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்து வருகிறேன். சாட்சி செல்லமுத்து என்னுடைய அப்பா. கடந்த 23.10.2018 ஆம் தேதி 3.00 மணிக்கு சோளக்காட்டுக்கு தட்டு எடுப்பதற்காக சென்றேன். நான் சென்றபோது வாழை மரத்துக்கு அடியில் ஒரு ஆண் பிரேதம் கிடந்தது. மேற்படி பிரேதத்திற்குஅருகில் வெள்ளை நிற கோடுபோட்ட முழுக்கை சட்டை கிடந்தது. ஒரு கருப்பு நிற பேண்ட் இருந்தது. இரண்டு துண்டாக இருந்த ஒரு பெர்முடாஸ் கிடந்தது ஒரு ஜோடி கருப்பு நிற ரப்பர் செருப்பு கிடந்தது. ஒமேகா கம்பி காடி போடும் இடம் என்கிற ஒரு விசிட்டிங் கார்டு கிடந்தது. ரத்தக்கரையுடன் கூடிய ஒரு ஓடைக்கல் கிடந்தது. நான் உடனடியாக என்னுடைய அப்பாவிடம் மேற்படி தகவலைச் சொன்னேன். என்னுடைய அப்பா மணியகாரருக்கு போன் பண்ணி தகவல் சொன்னார். பின்னிட்டு போலீசார் சம்பவ இடத்துக்கு வந்தார்கள். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

**1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் போலீசாரிடம் எத்தனை மணிக்கு நான் என்னுடைய அப்பாவிடம் தகவல் சொன்னேன் என்பதையோ அல்லது என்னுடைய அப்பா எத்தனை

மணிக்கு மணியக்காரருக்கு தகவல் சொன்னார்கள் என்ற விவரத்தையும் நேரம் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல சொன்னேன். சிறிது நேரத்தில் நிறைய ஆட்கள் கூட்டமாக கூடி விட்டார்கள் என்றால் சரிதான். மேற்படி பிணம் அழுகிய நிலையில் இருந்தது என்றால் சரிதான்

**2ம் எதிரிதரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN

Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.14 19:05:45 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.

# DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEEDINGS)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE,
DHARAPURAM

**SC. No:56/2021** **Deposition of Witness for : P.W.7**

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேந்திரன் | Caste | |
| Father's Name | : முத்துசாமி | Calling | |
| Age | : | Taluk | |
| Village | : | District | |

Solemnly affirmed according with the provisions of Act XX of 1973 on the day of 14.10.2025

<u>முதல் விசாரணை</u>

1. நான் வெள்ளகோயிலில் குடியிருக்கிறேன். லேத் வேலை செய்கிறேன் மேற்படி லேத்தின் பெயர் ஒமேகா ஆகும். கடந்த 40 ஆண்டுகளாக மேற்படி தொழிலை செய்து வருகிறேன். இறந்து போன ராமு என்பவரை எனக்கு தெரியும். அவரும் லேத் வைத்திருந்த அதன் அடிப்படையில் அவரை எனக்குத் தெரியும். கடந்த 18.10.2018 ஆம் தேதி மேற்படி ராமு லேத்தில் கம்பி காடி போடும் வேலைக்காக வந்து போய்க் கொண்டிருந்தார். அன்று மற்ற அனைவருக்கும் விசிட்டிங் கார்டு கொடுக்க வேண்டும் என்று சொல்லி என்னுடைய கம்பெனியிலிருந்து நான்கு ஐந்து கார்டுகளை எடுத்துச் சென்றார்.

2. 4–5 நாட்கள் கழித்து மேற்படி விசிட்டிங் கார்டையும் ஒரு போட்டோவையும் செல்போனிலிருந்து மூலனூர் போலீசார் காட்டினார்கள். போட்டோவில் இருக்கும் நபரை எனக்கு அடையாளம் தெரியுமா என்று கேட்டார்கள். போட்டோவில் பார்த்து எனக்கு அடையாளம் தெரியவில்லை ஆனால் அந்த விசிட்டிங் கார்டை வைத்து அது மேற்படி ராமுவாகத் தான் இருக்கும் என்று அனுமானத்தின் பேரில் போலீசாரை ராமுவின் அண்ணனிடம் கூட்டிச் சென்றேன். ராமுவின் அண்ணனை போலீசார் மேற்படி பிரேதத்தை

அடையாளம் காட்டுவதற்காக கூட்டிச் சென்றார்கள் அதற்கு பிறகு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. மேற்படி சம்பவம் தொடர்பாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>1–ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. மேற்படி என்னை மேற்படி வழக்கு தொடர்பாக எப்போது விசாரித்தார்கள் என்றால் தேதி நினைவில்லை என்னை லேத்தில் வைத்து விசாரித்தார்கள். போலீசார் கடந்த 18.10.2018 ஆம் தேதி மேற்படி இறந்து போன ராமு என்னிடம் மற்ற நபர்களுக்கு கொடுக்க வேண்டும் என்பதற்காக என்னுடைய விசிட்டிங் கார்டை வாங்கினார் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் நான் குறிப்பிட்டுள்ளேன். போலீசார் செல்போனில் இருந்த புகைப்படத்தை என்னிடம் காட்டி அடையாளம் கேட்டார்கள் என்று போலீசாரிடம் நான் குறிப்பிட்டேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். மேற்படி ராமு எந்தெந்த தேதிகளில் என்னுடைய லேத்துக்கு வந்து சென்றார் என்று குறிப்பாக என்னால் சொல்ல முடியாது என்றால் சரிதான். மேற்படி ராமு என்னிடம் வேலை பார்த்து வந்தார் என்பதற்காக எந்த விதமான ஆதாரமும் என்னிடம் இல்லை என்று சொன்னால் சரிதான் அவ்வாறு ஆதாரம் எதையும் நான் போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றாலும் சரிதான்.

2. 40 ஆண்டுகளாக நான் லேத் நடத்தி வருவதால் நூற்றுக்கணக்கான நபர்கள் என்னுடைய லேத்திற்கு வருவார்கள் என்றாலும் அதில் பல பேர் என்னுடைய விசிட்டிங் கார்டை வாங்கிச் செல்வார்கள் என்று சொன்னால் சரிதான். ஒரு விசிட்டிங் கார்டை மட்டும் வைத்து அதை யாருக்கு நான் கொடுத்தேன் என்று குறிப்பாக என்னால் சொல்ல முடியாது என்று சொன்னால் சரிதான். என்னிடம் அடையாளம் கேட்ட போலீசாரை இறந்து போன ராமுவின் அண்ணனிடம் கூட்டிச் சென்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் முதல் விசாரணை குறிப்பிட்டது போல மேற்படி ராமு என்பவர் என்னுடைய லேத்துக்கு எப்போதும் வரவில்லை என்றாலும் நான் அவரிடம் எப்போதும் விசிட்டிங் கார்டை கொடுக்கவில்லை என்று சொன்னாலும் சரியல்ல.

18.10.2018 ஆம் தேதி மேற்படி ராமு என்னுடைய லேத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**2ம் எதிரிதரப்பில் மேற்கண்ட குறுக்கு விசாரணையை தன்னுடையதாக ஏற்றுக்கொள்கிறார்.**

**மறுவிசாரணை:– இல்லை**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

SARAVANAN MANOKARAN
Digitally signed by SARAVANAN MANOKARAN
Date: 2025.10.14 19:05:53 +0530

3–ம் கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
தாராபுரம்.